# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 9 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, யூலை மாதம் 10 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 9 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.–ஓ. 25/2008*

**ஆயுதந்தாங்கிய படைமினருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையேயான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டியவரும், பாதுகாப்புப் பணியாட் டொகுதியினரின் தலைமையதிகாரியாக இருக்க வேண்டிய வருமான ஆளொருவரை நியமிப்பதற்கும் ; பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியினது குழுவைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியின் பணிக ளுக்காக ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** *(1) இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். இப்பிரிவின் ஏற்பாடுகள் நீங்கலாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*(2) இப்பிரிவின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி எத்தேதியன்று சபாநாயகரின் சான்றுப்படுத்துகை சட்டமூலத்தின் மீது புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*(3) இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகளை அல்லது பாகங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.*

## பாகம் I

### பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியை நியமித்தல்

*பாதுகாப்புப் பணியாட் டொகுதியினரின் தலைமை யதிகாரியை நியமித்தல்.*

**2.** (1) சனாதிபதியானவர், விடயத்துக்கேற்ப, தற்போது தரைப்படை ஏவுநர், கடற்படை ஏவுநர் அல்லது வான்படை ஏவுநர் ஆகப் பணியாற்றும் ஆட்களிலிருந்து பாதுகாப்புப் பணியாட் டொகுதியினரின் தலைமையதிகாரியாகவிருப்பதற்கான அலுவல ரொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி, பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் (இவர் இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) பணிப்பின்கீழும், மேற்பார்வையின் கீழும், கட்டுப்பாட்டின்கீழும் பணியாற்றுதல் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப, தரைப்படை ஏவுநராக, கடற்படை ஏவுநராக அல்லது வான்படை ஏவுநராகச் சேவையாற்றுகின்ற அலுவலரொருவர், பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியாக நியமிக்கப்படுமிடத்து, அவர் அவ்வாறு நியமிக்கப்பட்டதன்மேல், விடயத்துக்கேற்ப, தரைப்படை ஏவுநராக, கடற்படை ஏவுநராக அல்லது வான்படை ஏவுநராகத் தமது பதவியைத் துறத்தல் வேண்டும் :

ஆயின், (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம், (358ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம் மற்றும் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம் என்பவற்றில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பாதுகாப்புப் பணியாட் டொகுதியினரின் தலைமையதிகாரியாக அவ்வாறு நியமிக்கப் பட்ட ஆள், அவர் அப்பதவியை வகிக்கும்வரை, (1) ஆம் உட்பிரி வின்கீழ் அவர் நியமிக்கப்பட்ட நேரத்தில் எந்தச் சேவையைச் சேர்ந்தவராகவிருந்தாரோ அந்தச் சேவையின் கிரமமான படை உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும் :

ஆயின், மேலும், விடயத்துக்கேற்ப, தரைப்படை ஏவுநராக, கடற்படை ஏவுநராக அல்லது வான்படை ஏவுநராகத் தமது

பதவியை அத்தகைய அலுவலர் துறக்கும்போது, அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய நியமனத்தேதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தில், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தில் அல்லது (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய நியமனத்துக்கு முன்னர் அவர் முறையாக எந்தச் சேவையைச் சேர்ந்தவராக விருந்தாரோ முறையாக அந்தச் சேவையின் கிரமமான படையுறுப் பினரொருவராகத் தொடர்ந்திருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பாதுகாப்புப் படையாட்டொகுதியினரின் தலைமையதிகாரி, அவ்வாறு சேவையாற்றுகையில், தரைப்படை அலுவலரொரு வரின் விடயத்தில் ஜெனரால் என்ற பதவிவரிசையையும், கடற்படை அலுவலரொருவரின் விடயத்தில் கடற்றுறைத் தளபதி என்ற பதவிவரிசையையும், வான்படை அலுவலரொருவரின் விடயத்தில் பிரதான வான்படை மார்ஷல் என்ற பதவிவரிசை யையும் வகித்தல் வேண்டும்.

*பாதுகாப்புப் பணியாட்டொகுதி யினரின் தலைமை யதிகாரியினது பதவிக்காலம் முதலியன.*

**3.** (1) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதி காரியானவர், சனாதிபதியின் விருப்பத்துக்கமைய, இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதி காரியாகச் சேவையாற்றுகின்ற அலுவலரொருவர், இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அதே முறையில் மீள நியமிக்கப்படு வதற்கு தகவுடையவராதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய இரண்டு ஆண்டுக் காலப்பகுதி ஒரு தடவையில் ஒரு வருடத்திற்கு மீள் நியமிப்புக்களால் அளிக்கப் படுதல் வேண்டும் ; ஆயின் பாதுகாப்புப் பணியாட்டொகுதி யினரின் தலைமையதிகாரியின் மொத்தப் பதவிக்காலப் பகுதி கூட்டுமொத்தத்தில் நான்கு ஆண்டுகளை விஞ்சுதலாகாது:

ஆயின், மேலும், பொதுமக்கள் அவசரகால நிலைமையில் சனாதிபதியானவர், அத்தகைய பதவிக்காலங்களின் எவ்வெண் ணிக்கையினவான பதவிக்காலங்களுக்கும் பாதுகாப்புப் பணி யாட்டொகுதியினரின் தலைமையதிகாரியாகச் சேவையாற்று கின்ற அலுவலரை மீளநியமிக்கலாம்.

(3) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி, அதற்கெனச் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம், அவரது பதவிக்காலம் முடிவுறுமுன்னர் எந்நேரத்திலும், பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி என்ற பதவியிலிருந்து பதவிவிலகலை முன்வைக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தமது பதவிவிலகலை முன்வைக்கின்ற பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி, அத்தகைய பதவிவிலகல் சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அவருக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்வரை அவரது நியமனத்துக்குரிய கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுதலாகாது.

(5) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியினது பதவிக்காலம் முடிவுறுமுன்னர் அவர் இறக்கும், இளைப்பாறும், பதவிவிலகும் அல்லது இயலாமைக்குட்படும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் பட்சத்தில், சனாதிபதியானவர், இப்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் வேறோர் அலுவலரை நியமித்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர், அவர் குறிப்பிட்ட எந்தப் பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியை அடுத்துறுகின்றாரோ, அந்தப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியினது பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) இறப்பு, இளைப்பாற்றுகை, பதவிவிலகல், இயலாமை அல்லது அகற்றுகை காரணமாகப் பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிப் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, அடுத்துறுபவரொருவர் நியமிக்கப்படும்வரை அல்லது பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியினது வருகைதராமையின் அல்லது தற்காலிக இயலாமையின் விடயத்தில், அவர் பதவிக்குத் திரும்பிவரும்வரை அல்லது இயலாமை இல்லாதொழியும்வரை, விடயத்துக்கேற்ப, தரைப்படை ஏவுநராக, கடற்படை ஏவுநராக அல்லது வான்படை ஏவுநராகத் தமது கடமைகளுடன்சேர்த்து மேலதிகமாகப்

பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி என்ற பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் தற்காலிகமாகப் புரிவதற்கு, சனாதிபதியானவர், பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிக் குழுவுறுப்பினர்களிலிருந்து உறுப்பினரொருவரைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(8) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படும் பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிக் குழுவின் உறுப்பினரொருவர், விடயத்துக்கேற்ப, அடுத்துறுபவரொருவர் நியமிக்கப்படும்வரை அல்லது பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி பதவிக்குத் திரும்பிவரும்வரை, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி என்ற பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் புரிதல் வேண்டும்.

*பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியை அகற்றுதல்.*

**4**. பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியானவர், அதற்கான காரணங்கள் காட்டப்படாமல், தேசிய பாதுகாப்பு விடயங்களைக் கவனத்துட்கொண்டு, சனாதிபதியினால் எந்நேரத்திலும் அகற்றப்படலாம்.

*பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியினது பணிகள்.*

**5**. செயலாளரின் அதிகாரத்துக்கும், பணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும், மேற்பார்வைக்கும் அமைய, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியினது பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) ஆயுதந்தாங்கிய படையினரின் செயல்நுணுக்கப் பணிப்புக்கு ஏற்பாடுசெய்வதில் உதவுதல் ;

(ஆ) ஆயுதந்தாங்கிய படையினரின் கூட்டுத் தொழிலுக்கமர்த்துகைக்கான கோட்பாடொன்றை அபிவிருத்தி செய்தல்;

(இ) ஆயுதந்தாங்கிய படையினருக்கான செயல்நுணுக்கத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு வசதியளித்தல் ;

(ஈ) ஆயுதந்தாங்கிய படையினருக்கிடையே சமாசாரம் தொடர்பான பணிகள் தொடர்பில் கருமங்களை ஒருங்கிணைத்தல் ;

*(உ) எதிரிகளாகக் கூடியவர்களின் ஆற்றல்களுடன் ஒப்பிடுகையில் ஆயுதந்தாங்கிய படையினரின் ஆற்றல்களைத் தீர்மானிப்பதற்கான மதிப்பீடுகளைப் பொறுப்பேற்றல் ;*

*(ஊ) ஆயுதந்தாங்கிய படையினருக்கான தொழிற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு வசதியளித்தலும் ஆயுதந்தாங்கிய படையினருக்கிடையே அவற்றைச் செயற்படுத்துவதனை ஒருங்கிணைத்தலும் ;*

*(எ) ஆயுதந்தாங்கிய படையினர் தொடர்பான எதிர்பாரா நிலைமைகளுக்கான திட்டங்களைத் தயாரித்தலும் பரிசீலனை செய்தலும் ;*

*(ஏ) முக்கியமான குறைவுபாடுகள் பற்றியும் வலிமைகள் பற்றியும் மதியுரையளித்தலும், -*

*(i) தேசியப் பாதுகாப்புக் குறிக்கோள்களை ஈடுசெய்வதிலும் ;*

*(ii) கொள்கைக்கு இசைந்தொழுகுவதனை உறுதிப்படுத்துவதிலும் ,*

*அத்தகைய குறைவுபாடுகளினதும் வலிமைகளினதும் தாக்கத்தை மதிப்பீடுசெய்தலும் ;*

*(ஐ) ஒரு நிதியாண்டுக்காக ஆயுதந்தாங்கிய படையினரின் நிகழ்ச்சித்திட்டங்களும், விதப்புரைகளும், வரவு செலவுத்திட்ட உத்தேசங்களும் எந்த அளவுக்குச் செயல்நுணுக்கத் திட்டங்கள் தொடர்பாகத் தாபிக்கப்பட்ட முன்னுரிமைகளுக்கு இசைந்தொழுகுகின்றனவோ அந்த அளவுபற்றி மதியுரையளித்தல் ;*

*(ஒ) ஆள்வலு மற்றும் சாதனம் தொடர்பாக ஆயுதந்தாங்கிய படையினரின் பாரிய நிகழ்ச்சித்திட்டங்களும் கொள்கைகளும் எந்த அளவுக்குச் செயல்நுணுக்கத் திட்டங்களுக்கு இசைந்தொழுகுகின்றனவோ அந்த அளவுபற்றி மதியுரையளித்தல் ;*

(ஓ) உத்தேசிக்கப்பட்ட பாதுகாப்புப் பெறுகைத் திட்டங்களுக்கெதிராக இராணுவத் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தலும், அதற்கிணங்க அமைச்சுக்கு மதியுரையளித்தலும் ;

(ஔ) ஆயுதந்தாங்கிய படையினரின் கூட்டுப்பயிற்சிக்கான கொள்கைகளை வகுத்தமைத்தல் ;

(க) ஆயுதந்தாங்கிய படையினரினாலான சமாதானம் பேணும் தொழிற்பாடுகளுக்கான கொள்கைகளை வகுத்தமைக்க வசதிசெய்தல் ; அத்துடன்

(ங) மேலேயுள்ளவற்றைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்படுகின்றவாறான அல்லது அவசியமானவாறான அத்தகைய வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்.

## பாகம் II

### பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் குழு

*பாதுகாப்புப் பணியாட் டொகுதித் தலைமை யதிகாரியின் குழு.*

**6**. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்குள் பாதுகாப்புப் பணியாட்டொகுதி தலைமையதிகாரியின் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் “குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்)

(2) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சனாதிபதியால் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரி ; இவர் தவிசாளராதல் வேண்டும்.

(ஆ) தரைப்படை ஏவுநர் ;

(இ) கடற்படை ஏவுநர் ; மற்றும்

(ஈ) வான்படை ஏவுநர் ;

*நடைமுறைப் படுத்துதலுக்கு தவிசாளர் வசதியளித்தல்.*

**7.** (1) தவிசாளர், இராணுவக் கருமங்கள் தொடர்பில் பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கும் ஆயுதந்தாங்கிய படைகளுக்குமிடையே எல்லாக் கருமங்களையும் நடைமுறைப்படுத்துதலுக்கு வசதியளித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், (1) ஆம் உட்பிரிவினின்றெழும் பணிகளை தரைப்படை ஏவுநருடனும் கடற்படை ஏவுநருடனும் வான்படை ஏவுநருடனுமான கலந்தாலோசனையுடனும் செயலாளரின் பணிப்பின்கீழும் மேற்பார்வையின்கீழும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) தவிசாளர், ஏதேனும் கருமம் தொடர்பில் அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அத்தகைய கருமம் தொடர்பில் தோதான தென அவர் கருதுகின்றவாறு இராணுவ மதியுரையினதும் அபிப்பிராயங்களினதும் நிகழ்வெல்லையை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(4) தவிசாளர் தமது சொந்த மதியுரையையும் அபிப்பிராயத்தையும் முன்வைத்தலானது அநாவசியமாக தாமதப் படுத்தாமையை கூடியளவு சாத்தியப்படும் அளவுக்கு உறுதிப் படுத்துவதற்கான நடவடிக்கைமுறைகளைத் தாபித்தல் வேண்டும்.

## பாகம் III

### பணியாட்டொகுதி

*பணியாட்டொகுதி.*

**8.** (1) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகமானது, ஆயுதந்தாங்கிய படைகளின் ஆளணியினர், குடியியல் ஆளணியினர் ஆகிய இரு சாராரையும் உள்ளடக்கிய அத்தகைய பணியாட்டொகுதியைக் கொண்டு தாபிக்கப்படுதல் வேண்டும். குடியியல் ஆளணியினர் அதற்கு ஏற்புடைத்தாகின்ற வாறான நிர்வாக ஒழுங்குவிதிகளுக்கிணங்க தற்பொழுது பகிரங்க சேவையிலுள்ள ஆட்களிடையேயிருந்து அணிதிரட்டப்படுதல் வேண்டும்.

(2) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்திற்கு அவ்வாறு அவசியப்படின், செயலாளர், வலுவிலுள்ள நிர்வாக ஒழுங்குவிதிகளுக்கும் பகிரங்க சேவை ஆணைக் குழுவின் விதிகளுக்கும் இணங்க பணியாட்டொகுதியினரை ஆட்திரட்டலாம்.

(3) ஆயுதந்தாங்கிய படைகளின் ஆளணியினர் பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்தில் சேவைக்கென அணிதிரட்டப்படுமிடத்து அத்தகைய அணிதிரட்டுதல், விடயத்திற்கேற்ப, தரைப்படை ஏவுநருடனும் கடற்படை ஏவுநருடனும் வான்படை ஏவுநருடனுமான கலந்தாலோசனையுடன் செயலாளரினால் செய்யப்படுதல் வேண்டும்.

*பாதுகாப்புப் பணியாட் டொகுதித் தலைமை யதிகாரியின் அலுவலகத்திற்கு பகிரங்க அலுவலர்களை நியமனம் செய்தல்.*

**9**. (1) செயலாளரின் வேண்டுகோளின்பேரில் பகிரங் சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்திற்கு செயலாளரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையின் அலுவலரொருவர் பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய நியமனமானது, அத்தகைய நியமனத் தேதிக்கு முன்னைய நாளன்று அத்தகைய அலுவலரால் துய்க்கப்பட்டவைக்கு குறையாத அனுகூலமுடையவையான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கும் அதற்கு ஏற்புடைத்தற்பாலனவான அத்தகைய வேறு அரசாங்க ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

(3) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகம் குறித்துரைக்கப்பட்டவொரு சேவைக் காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்கு சேவையாற்ற உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்திற்குத் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையகாரியின் அலுவலகத்துக்கு ஆற்றப்படும் சேவை அத்தகைய உடன்படிக்கைக்கான கடப்பாட்டை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பகிரங்கக் கூட்டுத்தாபனங் களின் அலுவலர் களையும் சேவையாளர் களையும் பாதுகாப்பு பணியாட் டொகுதித் தலைமையதி காரியின் அலுவலகத்திற்கு நியமனம் செய்தல்.*

**10.** (1) செயலாளரின் வேண்டுகோளின்பேரில் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவை யாளரினதும் அத்துடன் அத்தகைய பகிரங்க கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினதும் சம்மதத்துடன் செயலாளராலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையாலும் உடன்பட்டுக்கொள்ளப் படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது செயலாளரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதி காரியின் அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் ஓர் அலுவலர் அல்லது சேவையாளர் பாதுகாப்புப் பணியாட்டொகுதி தலைமையதிகாரி யின் அலுவலகத்துக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள் பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண் டும்.

## பாகம் IV

### பொது

*ஒழுங்கு விதிகள்.*

**11.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடு களையும் நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்கு அல்லது விதித்துரைக்கப்பட வேண்டும் என இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டும் என இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக் கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) மேற்போந்ததின் பொதுமைக்குப் பங்கமின்றி அமைச்சர் பின்வருவன தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) கூட்டுக் கோட்பாடு, பயிற்சி, உயர்தொழில்சார் இராணுவக் கல்வி ;

(ஆ) இராணுவக் கல்வி நடாத்துவதற்கெனத் தாபிக்கப்பட்ட நிறுவனங்களில் நடத்தப்படக்கூடிய நிகழ்ச்சித்திட்டங் களும் பாடநெறிகளும் ;

(இ) ஆயுதந்தாங்கிய படைகளின் தொழிற்பாடுகள் தொடர்பில் தகவலை சேகரிப்பதற்கும் ஒன்றுதிரட்டுவதற்கும் தேக்கிவைப்பதற்குமான தரவுத் தளங்களையும் முறை மைகளையும் தாபித்தல் ;

(ஈ) அமைதிகாக்கும் தொழிற்பாடுகளுக்கான கொள்கைகள்;

(உ) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்திரட்டப் பட்ட ஆளணியினருக்கு ஏற்புடைத்தான நியதிநிபந்த னைகளைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டுநெறிகள் ;

(ஊ) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்திற்கு எந்த நிபுணர்களின் சேவைகள் பெறப்படக்கூடுமோ அந்த நிபுணர்களின் தகைமைகள்;

(எ) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்திற்குள் மனிதவளங்களின் அபிவிருத்திக் கான நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளி யிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்திற்கென பாராளு மன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு

அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர்செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**12.** (1) அமைச்சர், செயலாளருடனான கலந்தாலோசனையுடன் பொதுவில் பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டிற்கும் குறிப்பாக பின்வரும் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்க லாம் :-

(அ) அமைச்சில் சேவையாற்றும் ஆட்களால் அணியப்பட வேண்டிய சீருடைகள் உட்பட ஆடைசார்ந்த ஒழுங்கு முறைக்கோவை ;

(ஆ) பாதுகாப்புப் பணியாட்டொகுதித் தலைமையதிகாரியின் அலுவலகத்தில் சேவையாற்றும் ஆட்களின் நடத்தை, கடமைகள், பணிகள்.

(2) அமைச்சரால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகளின் அல்லது விதிகளின் மீறுகைக்கான தண்டனை.

**13.** இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாத லும் வேண்டும்.

**14.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் பயனுறுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தினதும் அத்தகைய எழுத்திலான வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*இச்சட்டம் எழுத்திலான வேறு சட்டங்களை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

*பொருள் கோடல்.*

‘‘ஆயுதந்தாங்கிய படைகள்’’ என்பது, (357ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம், (358ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம் மற்றும் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம் என்பவற்றின் கீழ் முறையே தாபிக்கப்பட்ட இலங்கை தரைப்படை, இலங்கை கடற்படை அத்துடன் இலங்கை வான்படை என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*